**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**M.C.O.P. No.19 / 2022**

Deposition of witness for PW1

Name : ராமசாமி

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act 1 of 1872 of the 10th day of June, 2026.

---

**முதல் விசாரணை:**

இந்த மனுவின் மனுதாரர் எனது மைனர் மகன் ஆவார். மைனர் மகனின் தகப்பனார் என்ற முறையில் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் உண்மையென்று உறுதி கூறுகிறேன். என் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்கிறேன்.

1. 13.04.2022ம் தேதிய செக்காணூரனி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கு.எண்.143-2022ன் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1.

2. 13.04.2022ம் தேதிய காயச்சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2.

3. 18.05.2022ம் தேதிய சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3.

4. 18.05.2022ம் தேதிய 1ம் எதிர்மனுதாரரின் TN 58 AE 5623 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4.

5. 13.04.2022ம் தேதிய பார்வை மகஜர் மற்றும் வரைபடம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ,5.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.10 02:55:12 +0530

Sub Judge,
Usilampatti.